# மணி விழா வாழ்த்து!

**திரு ச. திருநாவுக்கரசு – திருமதி தி. கல்யாணி**

**நாள்: ஜூன் 1990**

மண்ணகம் போற்றும் மாண்புடன் வளர்ந்து,
தன்னலம் அறியா தண்மையில் சிறந்து,
விண்ணவர் போற்றும் அன்பில் தழைந்து,
பொன்னெனப் பூணும் புது மணக் கோலம்!

மன்னிய உறவை மகிழ்வுடன் நிறுத்தி,
இன்னிய தமிழில் இயம்புவேன் வாழ்த்து!
முன்னொரு காலம் முகிழ்ந்த நல்லுறவு!
பின்னவர் பலரால் பிரியமாய் வளர்ந்தது,

எண்ணிடும் போழ்தில் இன்பமே சேர்க்கும்!
அன்னையின் உறவும் அடுத்ததாய் நின்றதால்,
பின்னிய உறவில் பிரியமே வளர்ந்தது!
முன்னவர் பாட்டனின் பெயர்சொலும் வழிமுறை!

இன்னிய நாளிதில் இன்பம் மேவிட,
கண்டிடும் பெருவிழா களிப்புடை **மணிவிழா!**
கண்ணனின் மருமகன் கார்த்திகைத் திருமகன்,
மன்னவன் அருளால் மகிழ்வுடன் வாழ்கவே!

திண்ணிய கேண்மைத் **திருநாவுக்கோரரசு**,
எண்ணியோர் **ஆண்டு அறுபது** கண்டநல்,
புண்ணிய நாளிதில் போற்றுவானே என்கந்தன்!
எந்நாளும் வாழ்க இனிது!

- **அன்புடன்,**

**கு.ப. அசோகன்,** **18-06-1990**
சென்னை – 40